(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 402.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 27, திங்கட்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2665/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பன்சாலைகள், கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட சமய வணக்கஸ்தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்ப்டுள்ள அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உதவித்திட்டங்கள் சமபந்தமான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3245/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தபால் திணைக்களம் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3720/ '13

3.

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத என்ஜின்கள் மற்றும் பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவை கொள்வனவு செய்யப்பட்ட நாடு அல்லது நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கொள்வனவு செய்யும்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்;

(v) நிதி பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி கடனின் அளவு, வட்டி வீதங்கள் மற்றும் ஏற்புடைய நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி என்ஜின் மற்றும் பெட்டிகளில் தேவையான தொழில்நுட்பங்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பெட்டிகள் மற்றும் என்ஜின்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி விசாரணைக்கமைய குறித்த கொள்வனவு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(v) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3830/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹக்மன - மாத்தறை வீதியை விஸ்தரித்து 'கார்பட்' இடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ப்படுகின்றதா என்பதையும்;

(ii) இவ்வீதியை விஸ்தரித்து அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இதற்கென நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாத்தறை - ஹக்மன வீதி, கொடகம - பெலிஅத்த கடுகதி நெடுஞ்சாலைக்கான நுழைவாயிலெனக் கூறி விஸ்தரிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) இவ்வீதி விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுமாயின், இதைவிட அதிக பிரதேசங்களை உள்ளடக்கும் கொடகம - அகுரஸ்ஸ வீதியை அபிவிருத்தி செய்யாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இற்றைக்கு 7 - 8 வருடங்களுக்கு முன்பு 'கார்பட்' இடப்பட்ட இவ்வீதியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் உத்தியோகத்தர்களின் பிழையான அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) 'கார்பட்' இடப்பட்ட வீதிக்கு மீண்டும் கார்பட் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தலானது நிதி விரயம் செய்தலாகுமல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4176/ '13

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கொலான்னாவ பிரதான சேவை நிலைய உபகரண வேலைத் தளத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் எவ்வுத்தியோகத்தரின் கீழ் நடைபெறுகின்றதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் இவ்வேலைத்தளத்தில்,

(i) பம்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு, உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திருத்துவதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) உதிரிப் பாகங்களை விற்பனை செய்ததன் ஊடாக ஈட்டப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2013 யூன் மாதம் இறுதியளவில் இவ்வேலைத்தளத்தில் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4584/ '13

6\.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் பங்களிப்புத் தொகையில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற கட்டாய காப்புறுதித் திட்டமொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பத்தில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டு பிற்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்படி காப்புறுதி நடவடிக்கைகள் குறிப்பிட்ட கம்பனியினால் தரகர் நிறுவனமொன்றின் ஊடாக எம்.பீ.எஸ்.எல். காப்புறுதிக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியினால் குறிப்பிட்ட தரகர் நிறுவனத்திலிருந்து சேவைகளைப் பெறுதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) வெளிநாடு சென்றுள்ள ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்படுகின்ற தவனைத் தொகையிலிருந்து அந்த தரகர் கம்பனிக்கு செலுத்தப்படும் சதவீதம் எவ்வளவு;

(iii) இன்றுவரை அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iv) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்படி காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது தரகர்களின் சேவை பெறப்பட்டதா;

(v) தரகர் ஒருவரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டதன் மூலம் கிடைத்த நன்மை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தரகர் சேவைகளுக்காக செலுத்தப்பட்ட கட்டணங்களைப் பெற்ற தரகர் கம்பனியின் பிரதிநிதி யார்;

(ii) அந்த பிரதிநிதி மேற்கூறிய கட்டணம் செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த காலகட்டம் முழுவதிலும் மேற்படி கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருந்தாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4591/ '13

7\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் மாணவர் தொகையில் பாடசாலையை விட்டு விலகிச்சென்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர்கள் பாடசாலையிலிருந்து விலகிச்செல்வதற்கான காரணங்களை ஆராய்வதற்கான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஆய்வின்படி கண்டறியப்பட்டுள்ள காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) கண்டறிந்த அத்தகைய காரணங்களுக்குத் தீர்வுகளை முன்வைப்பதற்கும், பாடசாலையை விட்டு விலகிச் செல்கின்ற எண்ணிக்கையைக் குறைப்பதற்குமாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் செல்லல் அதிகளவில் நிகழும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களில் பாடசாலையை விட்டு விலகிச் செல்வதானது, பொதுவான காரணங்களுக்கு மேலதிகமாக வேறு விசேட காரணங்களால் நிகழ்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4673/ '13

8.

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிருமிநாசினிகள் பதிவாளர் பதவியை வகிப்பதற்காக இருக்க வேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பதவியில் பணியாற்றவேண்டிய கால எல்லைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதவிக்காக செலுத்தப்படும் சம்பளம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "சிறுநீரக நோய்க்குக் காரணமாக அமையலாம்" என்ற அடிப்படையில் தற்போதைய கிருமிநாசினிகள் பதிவாளரால் எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதிக்காக இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ள கிருமிநாசினி வகைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இறக்குமதியை நிறுத்துமாறு உலக சுகாதார அமைப்பினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள கிருமி நாசினிகள் யாவையென்பதையும்;

(iii) உலக சுகாதார அமைப்பினால் நாட்டிற்கு இறக்குமதி செய்யாதிருக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள கிருமிநாசினிகளை இறக்குமதி செய்தல் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) தற்போது அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள கிருமிநாசினிகள் வேறு பெயர்களின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கம்பனிகளுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4754/ '14

9.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது இயங்கிவரும் நிலையிலுள்ள மேற்படி தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் இயங்கிவந்த தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் நிலையிலுள்ள தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 80 தேங்காய் எண்ணெய்த் தொழில்சாலைகள் மூடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4850/ '14

10.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஆளொருவர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதமொன்றுக்கு அவசியமான குறைந்தபட்ச செலவினத்தின் அடிப்படையில் மாதந்தோறும் மாவட்ட வறுமைக் கோட்டை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கொழும்பு மாவட்டம் பற்றிய கிடைக்கக்கூடியதாகவுள்ள மிகவும் அண்மைய உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டையும்;

(ii) மேற்கூறிய வறுமைக்கோட்டை கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்டுள்ள "அடிப்படைத் தேவைகள்" யாதென்பதுயும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4921/ '14

11.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சட்டக் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சட்டக் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆண்டில் சட்டக் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4958/ '14

12.

கௌரவ நிரோஷன் பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையினால் நிருவகிக்கப்படும் புத்தளம் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த வைத்தியசாலைகளில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சிகிச்சை பெற்றுள்ள வெளிநோயாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார், சுகாதார கவனிப்பாளர்கள் வைத்தியசாலைத் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய பணியாட் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவ் வைத்தியசாலைகளில் தற்போது இப்பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேலே ஆ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5030/ '14

13.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள வெற்றிலை பயிர்ச் செய்கையாளர்களின் எண்ணிக்கை அண்ணளவாக யாது;

(ii) அதிகளவில் வெற்றிலை பயிரிடப்படும் பிரதேசங்கள் யாவை;

(iii) வெற்றிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதானமான நாடுகள் யாவை;

(iv) வெற்றிலை ஏற்றுமதியின் மூலம் வருடாந்தம் ஈட்டப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் அளவு யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெற்றிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு மானிய முறையின் கீழ் உரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) உள்நாட்டுச் சந்தையில், மிகக் குறுகியதொரு காலப் பகுதியினுள் நடைபெறுகின்ற வெற்றிலையின் விலைத் தளம்பலை குறைப்பதற்கு உகந்ததொரு முறையியலை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதா;

(iii) வெற்றிலைப் பயிர்ச்செய்கை தொடர்பில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(iv) ஆமெனில், மேற்படி ஆராய்ச்சிகளின் ஊடாக வெற்றிலைப் பயிர்ச்செய்கையின் நன்மைக்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான கண்டுபிடிப்புக்கள் அல்லது விதப்புரைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5192/ '14

14\.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் யாது;

(ii) மேற்படி மீனவர் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத் தரப்பினரின் தலையீடு யாது;

(iii) தற்போது இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களை விடுவிப்பதில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தலையீடு யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டிருப்பின், இதற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுத் தீர்விப்பொதியொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அது யாது;

(iii) மேற்படி நிவாரணப் பொதிக்கும் எரிபொருள் மானியத்துக்கும் இடையிலான வேறுபாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2734/ '12

15\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மெல்சிறிபுர உஸ்ஆர குருஎல அணைக்கட்டு மூலமாக செய்கை பண்ணக்கூடிய வயல்களின் ஏக்கரளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அணைக்கட்டின் மூலம் தங்கி வாழும் கமக்காரக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றளவில் மேலே குறிப்பிட்ட குருஎல அணைக்கட்டு உடைந்துள்ளதோடு, அதன் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏறக்குறைய 500 கமக்காரக் குடும்பங்கள் நீரின்றி சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) குருஎல அணைக்கட்டினை மறுசீரமைப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடும் மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மறுசீரமைப்புப் பணிகள் நிறைவுசெய்யப்படும் திகதி யாதென்பதையும்

(iv) மேற்படி அணைக்கட்டு மறுசீரமைக்கப்படும் வரை சிரமங்களுக்குள்ளாகிய கமக்காரக் குடும்பங்களுக்கு நட்டஈட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட இரண்டாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஒற்றோபர் 24) [1].

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 15.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 17.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 18.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 19.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 20.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 21.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---